
உ

# தஞ்சைப் பெருவுடையார் —
# பெரிய கோயில் வரலாறு



தஞ்சைப் பிரகதீசுவரர் ஆலயம்

இராசராச சோழன் (ஐப்பசிச் சதயம்) பிறந்தநாள்
தஞ்சைப் பெருவுடையார் மாபெரு அபிஷேக நினைவு வெளியீடு

★

மௌனகுரு வழிபாட்டுக் கழகம்,
திருச்சிராப்பள்ளி-2
31—10—1968

உ

சிவ சிவ

தஞ்சைப்

# பெருவுடையார் - பெரிய கோயில்

## வரலாறு

★


தொகுப்பாசிரியர் :

திருமுறைக்கலைஞர்

**வித்துவான் திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார் அவர்கள்**

[ தமிழகப் புலவர் குழுவினரில் ஒருவர் ]

மலைக்கோட்டை, திருச்சிராப்பள்ளி - 2.


★


திருச்சிராப்பள்ளி - உறையூர்

பெருவணிகர்

திருமுறைப்பேரன்பர், பசிப்பிணி மருத்துவர்

**சைவத்திரு. மு. ஆ. அருணாசல முதலியார் அவர்கள்**

பொருளுதவிபெற்று வெளிவருவது


★


வெளியீடு :

**மௌனகுரு வழிபாட்டுக் கழகம்,**

திருச்சிராப்பள்ளி-2

31—10—1968

முதற்பதிப்பு - 1968 — பிரதிகள் 1000.

இதன் விலை ரூ. **0—35.**

இதன் விற்பனைத் தொகை தஞ்சைப் பிரகதீசுவரர் ஆலயத்தில் அடுத்த ஆண்டு 1969-ல் நடைபெறும் இராசராசசோழன் நினைவுநாள் அபிஷேக நிதியில் சேர்க்கப்படும்.

---

ஆனந்தா அச்சகம், திருச்சி-2. போன் : 4642.

# முன்னுரை

சோழவளநாட்டின் தலைநகரான தஞ்சை மாநகரில் முதல் இராசராசனால் எடுப்பிக்கப் பெற்ற வரலாற்றுப் புகழ் மிகுந்த சிவாலயம் **இராசராசேச்சுரம்** என வழங்கப்படும் **பெருவுடையர் (பிரகதீசுவரர்) பெரியகோயில் ஆகும்.** இக்கோயில் சோழமன்னர்களாலும் அவர்களுக்குப் பின்னர் தஞ்சையை ஆண்ட நாயக்க, மராட்டிய மன்னர்களாலும் நன்கு பேணப் பெற்றுவந்து, தற்பொழுது இக் கோயில் பரம்பரைத் தரும கர்த்தாவாகிய **இராசஸ்ரீ இராஜாராம் ராஜா சாகேப்** அவர்கள் மேலான ஆதரவில் நடைபெற்று வருகின்றது.

இக் கோயிலில் எழுந்தருளிய பெருவுடையார், பெரியநாயகியம்மை ஏனைய சிவமூர்த்தங்கள் ஆகியவற்றிற்கு இராசராச சோழன் பிறந்த நாளாகிய ஐப்பசிச் சதய நாளில் மகாபிஷேக விழா பேரன்பர்களின் பெருமுயற்சியால் கீலக ஆண்டு ஐப்பசித் திங்கள் 15 ஆம் நாள் 31—10—68 வியாழன் அன்று நடைபெறுகின்றது இவ்விழாவினை நினைவு கூர **"தஞ்சைப் பெருவுடையார் பெரியகோயில் வரலாறு"** என்ற இச் சிறு நூல் எங்கள் **மௌனகுரு வழிபாட்டுக் கழக வெளியீடாக** வெளிவருகின்றது. இதன்கண் பெரிய கோயில் வரலாறு, இராசராசன் முதலியோர் வரலாறுகள் திருவிசைப்பா, திருப்புகழ் முதலியன இடம் பெற்றுள்ளன.

இச்சிறு நூலைப் பொருளுதவி புரிந்து வெளியிட்டு உதவியவர் திருச்சிராப்பள்ளி, உறையூர் பெரும் வணிகர் **சைவத்திரு மு ஆ. அருணசல முதலியார்** அவர்கள் ஆவார்கள் இப் பேரன்பர் நாளும் திருமுறைகளைப் பொருளுணர்ந்து ஓதி மகிழ்பவர்; திருமுறை வாணர்களை உள்ளன்புடன் போற்றிப் பேணுபவர்; ஆலய வழிபாட்டிலும் சிவலாயத் திருப்பணியிலும் பெரிதும் ஈடுபாடு கொண்டவர்; திருப்பைஞ்ஞீலியில் அப்பர் கட்டமுது உண்டருளிய திருக்குளத்தைப் புதுப்பித்துக் கருங்கல் பணி செய்த மெய்யன்பர்; இறைவனுக்கு நாளும் புட்பத் தொண்டு புரிந்து மகிழ்பவர்; கல்விக்குப் பெரும்

பொருள் செலவிடும் பெருங்கொடையாளர்; இம்மகாபிஷேக விழாவிலும் பெரும் பங்கு கொண்டவர்; எமது வழிபாட்டுக் கழகத்தின் புரவலர்களுள் ஒருவரும் ஆவார். அவர்களுக்கு எங்கள் கழகத்தின் நன்றி உரியதாகும்

இந் நூலை நன்முறையில் எழுதித்தந்தவர் எங்களை இறைவழிபாட்டில் எப்பொழுதும் ஈடுபடச் செய்பவரும், எங்கள் வழிபாட்டுக் கழகச் செயலாளரும், தமிழகப் புலவர் குழுவினருள் ஒருவரும் ஆகிய திருமுறைக் கலைஞர் வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார் அவர்கள் ஆவர். அவர்கட்கும் எங்கள் நன்றி உரியதாகும்.

இச்சிறுநூல் அன்பர்களுக்குப் பெரும் பயன் நல்கும் என்பது எங்கள் துணிபாகும்,

இங்ஙனம்,

திருச்சிராப்பள்ளி-2
31—10—1968

மௌனகுரு வழிப்பாட்டுக் கழகத்தார்.

உ

சிவ சிவ

திருச்சிற்றம்பலம்

# தஞ்சைப்

# பெருவுடையார்-பெரிய கோயில்

# வரலாறு

பெருவுடையார் துதி

தனியர்எத் தனையொ ராயிர வருமாம்
தன்மையர் என்வயத் தினராம்
கனியரத் தருதீங் கரும்பர்வெண் புரிநூற்
கட்டியர் அட்டஆர் அமிர்தர்
புனிதர்பொற் கழலர் புரிசடா மகுடர்
புண்ணியர் பொய்யிலா மெய்யர்க்கு
இனியர்எத் தனையும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே.

— **திருவிசைப்பா.**

## I. தோற்றுவாய்

ஆதியும் அந்தமும் கடந்த பரம்பொருள் — அங்கு இங்கு எனாதபடி எங்கும் நிறைந்த பரம்பொருள் உலகிலுள்ள உயிர்களுக்கு அருள்புரியும் பொருட்டுத் தமது அருவ நிலையிலிருந்து இறங்கி **அருவுருவத்திருமேனி** அல்லது **உருவத் திருமேனி** கொண்டு எழுந்தருளி அருள் செய்யும் இடமே **ஆலயம்** அல்லது **கோயில்** ஆகும். (ஆ + லயம் = ஆலயம் ஆ — ஆன்மா; பசு. லயம் — (கடவுளை) அடையும் இடம் கோ + இல் = கோயில். கோ — கடவுள். இல் — எழுந்.

தருளிய புனிதமான இடம்) அருவுருவத் திருமேனி – சிவலிங்க மூர்த்தி. உருவத் திருமேனி – சந்திரசேகரர், சோமாஸ் கந்தர் நடராசர் முதலாய சிவமூர்த்திகள்.

பசுவின் உடல் முழுதும் பால் பரவி மறைந்திருப்பினும் அதன் மடியின் (முலைக்காம்பின்) மூலமே பால் வெளிப்படுவது போல இறைவன் எங்கும் நிறைந்து மறைந்து நிற்பினும் ஆன்றோர்கள் அமைத்துள்ள ஆலயத்தில் தயிரில் நெய்போல எழுந்தருளியுள்ளார் பெறற்கரிய மானுடப்பிறப்பைப்பெற்ற — சைவசமயத்தைச் சார்ந்த ஒவ்வொருவரும் பசுபதியாகிய சிவபெருமானது திருவருளை எளிதில் சிவாலயத்திலே பெற்று உய்யலாம். ஆகவே, ஆலயமே — கோயிலே மக்கள் இறைவனை எளிதில் வழிபட்டு அருள்பெறும் சிறந்த இடமாகும் என்பதாம்.

சைவத்தில் **கோயில்** என்பது சிதம்பரத்தைக் குறிக்கும். அதுபோல, **பெரிய கோயில்** என்பது தஞ்சை இராசராசேச்சரம் என்னும் பிரகதீசுவரர் திருக்கோயிலையே குறிக்கும். இப் பெரிய கோயில் ஒன்பதாம் திருமுறையாகிய திருவிசைப்பா பெற்ற சிறப்பினையுடையது.

## 2. தஞ்சை நகரும் அதன் சிறப்பும்

சோழவள நாட்டின் ஒரு பகுதியான தஞ்சை மாவட்டம் 3654 சதுரமைலை யுடையது; கங்கையினும் புனிதமான காவிரியும், அதன் கிளை நதிகளான கொள்ளிடம், குடமுருட்டி, வெட்டாறு, வெண்ணாறு, வடவாறு, கல்லணைக் கால்வாய் முதலிய ஆறுகளும பாயப்பெற்ற பெருவளங் கொழிப்பது; பற்பல பெரு நகரங்களைத் தன்னகத்தே கொண்டு, கல்வி, தொழில், வாணிபம முதலிய செல்வச் சிறப்புகளுடன் திகழ்வது. இததஞ்சை மாவட்டத்திற்குத் தலைநகராக விளங்குவது தஞ்சாவூர் (தஞ்சை) ஆகும.

ஆதியில் தஞ்சை நகர்க்கு **அளகை** எனப் பெயர் வழங்கியது. பின்னர் அங்கே தஞ்சன் என்னும் ஓர் அரக்கன்

வசித்து வந்தான். அதனால் அது தஞ்சன் ஊர், தஞ்சன்புரி, **தஞ்சாவூர்** என வழங்கியது. அதன் பிறகு **தஞ்சை** என மருவியது. இத் தஞ்சைமாநகரம் கீழ்மேல் சுமார் 3 மைல் அகலமும் தென்வடல் சுமார் $4\frac{1}{2}$ மைல் நீளமும் கொண்ட நிலப்பரப்பினையுடையது. இந்நகரில் **சிறிய கோட்டை, பெரிய கோட்டை** என இரண்டு உள்ளன தஞ்சை நகரின் தென் மேற்கில் உள்ள தஞ்சைப்பெருவுடையார் ஆலயம் (இராச ராசேச்சுரம்), சிவகங்கைக் குளம், தோட்டம் முதலியவற்றைச் சூழ்ந்துள்ளது சிறிய கோட்டை எனவும், சிவகங்கைக் கோட்டை எனவும் பெயர் பெறும். இக்கோட்டையைச் சுற்றி லும் அகழி உள்ளது. இதன் தென்பாலுள்ள அகழியில்தான் தற்போதைய கல்லணைக் கால்வாய் செல்லுகிறது. இக் கோட்டையே அன்றி நகரின் நான்கு இராச வீதிகளுக்கும் வெளிப்புறத்தில் ஒரு கோட்டையும் அகழியும் இருந்தன. அவை பெரும்பாலும் சிதைவுற்று ஆங்காங்கே ஒவ்வோ ரிடத்தில் பழங்காலச் சின்னமாக இன்று காணப்படுகின்றன. இக் கோட்டை பெரிய கோட்டை எனப் பெயர் பெறும்.

இப் பெரிய கோட்டைக்கு உள்ளே கீழ ராசவீதியை அடுத்து நாயக்கர் காலத்து அரண்மனை உள்ளது. இவ் வரண்மனை பின்னர் மகராட்டியர் காலத்து மன்னர்களுக்கும் இருப்பிடமாகத் திகழ்ந்தது. இவ்வரண்மனையில்தான் தஞ்சை நகரத்திற்குப் பெருஞ் சிறப்பை அளிக்கும் சரபோஜி மன்னர் **சரசுவதி மகால் நூல் நிலையமும், கலைக்கூடமும்** அமைந் துள்ளன. தஞ்சை மேலராசவீதியில் **பங்காரு காமாட்சி யம்மன்** ஆலயம் ஒன்று மிகச் சிறப்புடன் அமைந்துள்ளது. இவ்வம்மன் திருவுருவம் சொக்கத் தங்கத்தால் ஆனது. காஞ்சி புரத்து உற்சவ விக்கிரகமே முகமதியர் ஆட்சிக் காலத்தில் மறைமுகமாக எடுத்துவந்து இங்குப் பிரதிட்டை செய்யப்பட்ட தாகும்.

தற்போது தஞ்சைமாநகரில் அரசினர் கல்லூரி, மருத் துவக் கல்லூரி, கரந்தைத் தமிழ்ச் சங்கம் முதலியன அமைந்து சிறப்புற விளங்குகின்றன. இ ந் ந க ர ம் நகராட்சிக்கு உட்பட்டது.

## 3. இராசராசேச்சுரம் என்னும் பெரிய கோயிலின் முன்தோற்றம்

"பாண்டிய குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் நாம் எடுப்பித்த திருக்கற்றளி ஸ்ரீ இராசராசேச்சுரம்" என்று கல்வெட்டு கூறும் இராசராசேச்சுரம் என்னும் பெரிய கோயில், தஞ்சை நகர்க்குத் தென் மேற்கு மூலையில் தென் வடலாக அமைந்த சாலையின் மேற்புறம் சிறு கோட்டை அகழி அரண்களோடு அமைந்து விளங்குவது. இது சுமார் 793 அடி நீளமும் 397 அடி அகலமும் உடையது. சிவகங்கைச் சிறு கோட்டையின் தென் பகுதியிலே பெரிய கோயில் உள்ளது. இக்கோயில் கிழக்குநோக்கிய வாயில்களைப் பெற்றுள்ளது.முன்னர் சிறு கோட்டையின் அகழிழைக் கடந்து கோட்டைச் சுவரில் உள்ள வளைவுக்குள் நுழைந்து சென்றால் முதற்சோபுர வாயிலை அடையலாம், இக் கோபுர வாயில் **கேரளாந்தகன் வாயில்** எனப் பெயர் பெறும். இதனைத் தோரணவாயில் என்றும் கூறுவர். (கேரளாந்தகன் சேரர்களுக்கு யமன்.) இது சற்று அகன்று மூன்று அடுக்குகள் கொண்டு 90 அடி உயரம் உடையது வளைவு வாயிலின் இரு புறத்தும் கணபதியும் முருகனும் எழுந்தருளியுள்ளனர்.

இதற்கு அடுத்து இரண்டாம் கோபுரவாயில் உள்ளது இஃது **இராசராசன் வாயில்** எனப் பெயர் பெறும். இதனைத் திருமாளிகை வாயில் என்றும் கூறுவர். இக் கோபுரம் பற்பல சிற்ப உருவங்களைக் கொண்டு மிக அழகுடன் விளங்குவது. இவ்வாயில் காப்புக் கதவுகளை உடையது இவ்வாயில் முதல் வாயில் இவ்விரண்டின் இருமருங்கும் துவார பாலகர் உருவங்கள் கம்பீரத்துடன் திகழ்கின்றன இதனைக் கடந்து உட்சென்றதும் சுமார் 500 அடி நீளமும், 250 அடி அகலமும் உள்ள **வெளிமுற்றம்** (பரந்த பெருவெளி) உள்ளது. அது கருங்கல்லாலும் செங்கல்லாலும் பரப்பப் பெற்றது. வெளி முற்றத்தைச் சார்ந்த நாற்புறமும் திருமதில்களை அடுத்துத் திருச்சுற்று மாளிகைகள் அமைந்துள்ளன. வெளி முற்றப் பிரகாரத்தின் கிழக்கு முதலிய எட்டுத் திசைகளிலும் முறையே இந்திரன்,

அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்னும் அட்ட திக்குப் பாலகர்களின் திருவுருவம் அமைந்த கோயில்கள் விளங்குகின்றன. இங்குள்ள திக்குப் பாலகர்கள் திருவுருவம் கருங்கல்லில் செதுக்கப்பெற்றவை. அழகுடன் விளங்குவன.

## 4. பெருவுடையார் திருக்கோயில்

பரந்தவெளிமுன் பெரிய மேடை ஒன்று அமைந்துள்ளது. அம்மேடைமீது மேற்கு நோக்கியவாறு நந்தி (இடபதேவர்) உள்ளது. நந்திக்கு எதிர் முகமாகக் கிழக்கு நோக்கிய வண்ணம் பெருவுடையார் சந்நிதி உள்ளது. பெருவுடையாராகிய சிவ லிங்கப் பெருமான் எழுந்தருளிய இறையறை (கருப்பக்கிருகம்), அதனை அடுத்து உள்ளே சுற்றி வரும் பிரகாரம் அமைந்துள்ள அர்த்தமண்டபம், இரு பக்கமும் தூண்களும் வெளிவாசல்களும் உள்ள மகா மண்டபம், தென்பகுதியில் தியாகராசர் சந்நிதி யுள்ள தபந மண்டபம், நர்த்தன மண்டபம், வாத்திய மண்டபம் என்ற ஆறு பகுதிகளையும் இறைவன் கோயில் கொண்டுள்ளது. ஒவ்வொரு மண்டப வாயில்களின் இரு மருங்கிலும் துவார பாலகர்கள் இருக்கின்றனர். ஒவ்வொரு துவார பாலகரும் 18 அடி உயரமும் 8-அடி குறுக்களவும் கொண்டு கருங்கல்லால் அழகுடன் அமைந்ததாகும். கோயில் உள்வாயிலாகிய கருப்பக் கிருக வாயில் **திருவணுக்கன் திருவாயில்** எனப்படும்.

பெருவுடையார் சந்நிதியை அடைய நேர் சந்நிதி வழியே அன்றி, விமானத்தை அடுத்த மகாமண்டபத்தின் தென் புறத்திலும் வடபுறத்திலும் பழங்காலப் படிக்கட்டுகளுடன் வாயில்கள் உள்ளன. முன்னாளில் இவ்வாயில்களின் வழியே தான் சுவாமி சந்நிதியை அடைவது வழக்கம். தெற்கு வாயில் **விக்கிரமன் திருவாசல்** எனப்படும். தெற்கு வடக்கு வாயில் களின் படிக்கட்டுகள் கோயில் எடுப்பித்த காலத்தே அமைந்தவை என்பர். தெற்கு வடக்கு வாயில்களின் மேற் பகுதிகளில் முறையே சூரியனும் சந்திரனும் உள்ளனர். அத் தெற்கு வடக்கு வாயில்களின் கீழ்ப் பகுதிகளில் முறையே இலக்குமியும் சரசுவதியும் உள்ளனர்,

பெருவுடையார் சந்நிதியின் முன் மண்டபமாகிய வாத்திய மண்டபத்தின் முன் பகுதியில் இப்பொழுது படிக்கட்டுகள் அமைந்துள்ளன. இப் படிக்கட்டுகள் பிற்காலத்தே மகராட்டிய மன்னரால் கி பி 1803-ல் அமைக்கப்பெற்றவை என்பர். நேர்முகமாகச் சந்நிதியை அடையும் இப் படிக்கட்டுகள் உள்ள முதல் வாயிலின் தென் பக்கம் விநாயகரும் வட பக்கம் துர்க்கையும், துர்க்கைக்கு முன்னே பைரவரும் சனிபகவானும் எழுந்தருளியுள்ளனர்.

பெருவுடையார் மூலத்தானத்தை அடுத்த அர்த்த மண்டப இடையில் அமைந்த உள்ளறைத் திருச்சுற்று மாளிகையின் சுவர்களில் சுமார் 930 ஆண்டுகள் மறைபட்டிருந்து ஒன்றின் மேல் ஒன்றதான இரு அரிய ஓவியங்கள் (வண்ணச் சித்திரங்கள்) உள்ளன. மேலுள்ள ஓவியங்கள் நாயக்கர் காலத்திலும், மறைபட்டிருக்கும் ஓவியங்கள் சோழர் காலத்திலும் தோன்றியவை என்பர். தற்போது சுந்தரர் வரலாற்றின் ஓவியங்களும் பிற ஓவியங்களுமே காணக் கிடக்கின்றன.

வெளி முற்றத்தின் நடுவில் உயர்ந்த மேடையில் பெருவுடையார் திருக்கோயில் நிறுவப் பெற்றுள்ளது அது **மாடக்கோயில்** இலக்கணம் அமைந்துள்ளது ஆகும்.

## 5 பெருவுடையார் திருக்கோயில் விமானம்

பெருவுடையார் (பிரகதீசுவரர்) எழுந்தருளிய கருப்பக் கிருகத்தின் மேலே உள்ள கோயில் விமானம் சதுர வடிவானது. அதன் அடித்தளம் 96 அடி சதுரம். விமானம் அடி பருத்து நுனி சிறுத்த அமைப்பினைக்கொண்டது; 14 அடுக்குகள் கொண்டு 216 அடி உயர்ந்து நிற்பது. விமானத்தின் உச்சியும் கலசத்தின் அடிப்பாகமும் உருண்டை வடிவாய் அமைந்தவை விமான உச்சியில் பிரமரந்திர தளத்தில் போடப்பட்ட கூருங் கல் ஒரே கல். அது 25½ அடி சதுரம். நிறை 80 டன் என்பர். இக் கல் அழகி என்னும் நரை மூதாட்டியால் கொடுக்கப் பெற்றது என்றும் தஞ்சைக்குச் சற்று வடகிழக்கில்

கும்பகோணம் சாலையில் 4 மைல் தொலைவிலுள்ள வயலூரி லிருந்து சாரம்போட்டு இக்கல் விமான உச்சிக்கு ஏற்றப் பட்டது என்றும் கூறுவர். சாரம் போட்டதால் அவ்வூர் **சாரப்பள்ளம்** என இன்றும் வழங்கப்படுகிறது.

தூபித் தறியில் வைக்கப் பெற்றுள்ள செப்புக்குடம் 12½ அடி உயரமும் 3083 பலம் நிறையும் உடையது. அக் குடத்தின் மேல் போர்த்துள்ள பொற்றகடு 2926½ கழஞ்சு நிறையுள்ளது (கழஞ்சு - 12 பணவெடை கொண்ட நிறை.) பிரமரந்திரத்தளக் கல்லின் நான்கு மூலைகளிலும் முறையே இரண்டிரண்டு நந்திகள் (ரிஷபங்கள்) அமைந்துள்ளன. அவை ஒவ்வொன்றும் தனித்தனி 6½ அடி நீளமும் 5½ அடி அகலமும் உள்ளது. இந்நந்திகளைச் சற்று ஒத்த நந்திகள் அம்மன் கோயிலுக்கு எதிரிலுள்ள திருச்சுற்று மாளிகையில் இருப்பதைக் கண்டு மகிழலாம். விமானத்தின் தென்புறம், மேல்புறம், வடபுறம் இவற்றில் பற்பல சிவமூர்த்தங்களின் உருவங்களும், சரித்திர சம்பந்தமான உருவங்களும் அமைந் துள்ளன. இங்குள்ள சிற்ப வேலைப்பாட்டின் திறமை மெச்சத் தக்கதாகும்.

இப் பெரிய கோயில் கருப்பக்கிருக விமானம் **தட்சிணமேரு** எனப்படும். இதனை உத்தம விமானம் என்றும் கூறுவர். பிருகத் சம்ஹிதை என்ற நூலில் மேரு, மந்தரம் கயிலாயம், குஞ்சரம், ரிஷபம், சிம்மம் முதலிய பலவகையான விமானங்கள் கூறப்பெற்றுள்ளன. அவற்றுள் இவ் விமானம் மேரு அமைப்பினை உடையது; தென்னாட்டில் இருப்பது. அதனால் தட்சிணமேரு எனப்பட்டது.

பெரிய கோயில் கருப்பக் கிருக விமான வேலை நடை பெறும்போது, தஞ்சையில் இருந்த **அழகி** என்னும் ஒரு நரை மூதாட்டி சிற்பிகளுக்கு உணவு முதலியன அளித்து உபசரித்து வந்தாள்; இறைவனின் திருப்பணியில் தனது சிறு பொருளாவது பயன்படவேண்டும் என்று கருதினாள். அதனைச் சிற்பிகள் அறிந்தனர். விமான உச்சியின் பகுதி

வேலை நடைபெறும்போது அவர்கள் தங்கள் நன்றியைக் காட்டும் அறிகுறியாக, அழகி கருதியவாறு அவள் வீட்டில் இருந்த கல் ஒன்றை விமானத்தின் உச்சிப் பகுதியில் பிரமரந் திரத் தளக் கல்லாக வைத்துக் கட்டினார். ஒரு நாள் இராச ராசன் கனவில் பெருவுடையார் தோன்றி, "யாம் கிழவி நிழலில் உவந்து இருக்கின்றோம்" என்று கூறியருளினார். உடனே அரசன் விழித்தெழுந்து உண்மையறியாது மயங்கிப் பின்பு சிற்பிகளால் உண்மை அறிந்து மகிழ்ந்தனன். இதனை, "அம்மையார் நிழலில் யாம் அமர்வோம் என்றருள் செய்த, செம்மையார் வீற்றிருக்கும் திருத் தஞ்சை" எனவரும் **மாயூரப் புராணத்தாலும்**, "பொன்னி - நதியுடைக்கோன் முன்னோர் நரை முதியாள் நிழல், வதிகின்றோம் என்ன வந்தான் வந்தான்" எனவரும் **தஞ்சைப் பெருவுடையார் உலாவாலும்** அறியலாம். இராசராசன் அழகியின் அன்பின் செயலுக்கு மகிழ்ந்து அவளுக்கு வேண்டிய நிலபுலங்களை வழங்கினான் என்பர்.

இராசராசன் இப்பெரிய கோயிலை கி. பி. 1003ல் இருந்து 1009-வரை எடுத்து முடித்துக் குடமுழுக்குச் செய்தான் என்று ஒரு கல்வெட்டு கூறுகிறது. இக் கோயில் முழுதும் கருங் கல்லால் கட்டியதாகும்.

## 6. பெருவுடையார் - சிவலிங்கத்திருமேனி

பெரியகோயில் கருப்பக் கிருகத்தில் எழுந்தருளிய சிவ லிங்கத் திருமேனி மிகப் பெரியது. இது நருமதை நதி தீரத்தி லிருந்து இராசராசனால் கொண்டுவரப் பெற்றது என்பர். இச் சிவலிங்க மூர்த்தி சுமார் மொத்தம் 16 அடி உயரம். பாணம் (உருத்திரபாகம்) 9 அடி உயரமும் பிரம விஷ்ணு பீடங்கள் சேர்ந்த ஆவுடையார் 7 அடி உயரமும் ஆக 16 அடி உயரம் ஆகும். பாணத்தின் சுற்றளவு சுமார் 28 அடியும், ஆவுடையார் சுற்றளவு சுமார் 58 அடியும் உடையது. இச் சிவலிங்கத் திருமேனியைக் காட்டிலும் பெரியதொரு சிவ லிங்கத்திருமேனி எங்கும் இல்லை.

"தஞ்சைத் தளிக்குளத்தார்" என்று அப்பர் சுவாமிகள் தம் தேவாரத்தில் ஒரு தலம் (தஞ்சைத் தளிக்குளம்) கூறுகிறார். அது பெருவுடையாராகிய சிவலிங்க மூர்த்தி எழுந்தருளிய இடமே என்றும், இவ்விடத்திலேதான் இராசராசன் பெருவுடையாரைத் தாபித்தான் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர்.

இச் சிவலிங்க மூர்த்திக்கு அட்டபந்தன மருந்து ஆதி சைவ சிவாசாரியர்களாலும் சாத்திப் பந்தனம் செய்ய முடியவில்லை. பிறகு அரசன் கருவூர்த் தேவரைக்கொண்டு மருந்து சாத்திப் பந்தனம் செய்து பெருமகிழ்ச்சி அடைந்தான் என்பது வரலாறு.

## 7. பெரியநந்தி (இடபதேவர்)

இறைவன் சந்நிதிக்கு எதிரே கொடிமரத்தின் முன் பெரிய மேடையின் மீது உயர்ந்ததோர் மண்டபத்தில் பெரிய நந்தி அருள் நோக்கோடு திகழ்கின்றது. இந்த நந்தி 25 டன் நிறையும், 12 அடி உயரமும், 19½ அடி நீளமும், 8¼ அடி அகலமும் கொண்ட ஒரே கருங்கல்லில் செதுக்கப் பெற்றது. இக் கருங்கல் திருச்சிராப்பள்ளியின் வடக்கே உள்ள பெரம்பலூருக்கு அண்மையில் விளங்கும் பச்சைமலையினின்றும் கொண்டுவரப் பெற்றது என்பர். பெரிய நந்தி இருக்கும் உயர்ந்த மண்டபம் நாயக்க மன்னர்களால் கட்டப் பெற்றது என்றும் கூறுவர். நந்தி மண்டபத்தின் கீழ்ப் பகுதியில் பலிபீடம் உள்ளது. இதற்குக் கீழ்ப்பகுதியில் அமைந்த மேடை **குறவஞ்சிக்கூத்து ஆடும் மேடை** என்பர். இம் மேடை ஆடவல்லான் சந்நிதிக்கு நேரே அமைந்துள்ளது.

## 8. விநாயகர் ஆலயம்

வெளிமுற்றத் திருச் சுற்றின் தென்மேற்கு மூலையில் விநாயகர் ஆலயம் ஒன்று உள்ளது. அது மண்டபங்களுடன் கூடியது. இங்குள்ள விநாயகர் மிக அழகு வாய்ந்தவர்;

எண்ணியதை முடித்து வைப்பவர். இக் கோயில் கி. பி 1803ல் இரண்டாம் சரபோஜி மன்னன் கட்டியது என்பர் இக்கோயில் கட்டுமுன் பரிவார ஆலயத்து விநாயகரே முதன்மையாக இருந்தார் என்பர்.

## 9. ஆறுமுகக் கடவுள் ஆலயம்

வெளி முற்றத் திருச்சுற்றின் வடமேற்கில் ஆறுமுகக் கடவுள் வள்ளி தேவயானை சமேதராக எழுந்தருளிய ஆலயம் ஒன்று உள்ளது. இது யானை குதிரைகள் பூட்டிய இரதம் போல அமைந்துள்ளது; சிற்ப நுட்பங்கள் மிகச் சிறந்து திகழ்வன. இங்கு இடப்பக்கம் திரும்பிய மயில்மீது திருவாசியுடன் எழுந்தருளிய ஆறுமுகக் கடவுள் ஒரே கருங்கல்லில் மிக அழகுடன் செதுக்கப்பெற்றது. இக்கோயிலின் வாயிற்படியிலுள்ள துவாரபாலகர் இருவரின் உருவம் மிக அழகுடையது இக் கோயில் கி. பி. 17-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆட்சிபுரிந்த நாயக்கமன்னரால் கட்டப்பெற்றது ஆகும்.

## 10. ஆடவல்லான் - நடராசர் சந்நிதி

வெளிமுற்றத் திருச்சுற்றின் வடகிழக்கு மூலையிலுள்ள ஒரு தனி மண்டபத்தில் சிவகாமி அம்மையோடு நடராசப் பெருமான் எழுந்தருளிய சந்நிதி உள்ளது. இம்மூர்த்தி பஞ்ச லோகத்தால் அமைந்தது; மிக வனப்பு வாய்ந்தது கருவூர்த் தேவர் உடனிருந்து இம்மூர்த்தியை வார்ப்பித்தார் என்பர் இம் மூர்த்திக்கு ஆடவல்லான் என்ற ஒரு திருநாமமும் உண்டு. இம் மூர்த்திக்கு மார்கழித் திருவாதிரையில் மிக விசேடம். இச் சந்நிதிக்கு எதிரே (தெற்கே) குறவஞ்சிக் கூத்து ஆடும் மேடை உள்ளது

## 11. தியாகராசப் பெருமான் சந்நிதி

பெருவுடையார் சந்நிதியின் நேரே அடுத்துள்ள தபந மண்டபத்தின் தென்பகுதியில் கிழக்குநோக்கியவாறு தியாகராசப் பெருமான் (சோமாஸ்கந்தமூர்த்தி) எழுந்தருளியுள்ளார்,

இவர்க்குத் **தஞ்சை விடங்கர்** என்று இராசராசன் பெயர் சூட்டினன். திருவாரூர் தியாகராசப் பெருமானிடம் இராச ராசன் கொண்ட பேரன்பினால் இங்கும் தியாகராசரை எழுந்தருளச் செய்து வழிபட்டான் என்பர். திருவாரூர் தியாகராசருக்கு என்னென்ன சிறப்புக்கள், உற்சவங்கள், வாத்தியங்கள் உள்ளனவோ அவ்வளவும் தஞ்சைவிடங்கர்க்கும் உள்ளன. திருவாரூரில் தியாகராசருக்குப் பூசை நடந்த பின்னரே மூலத்தான மூர்த்திக்குப் பூசை நடைபெறும். அதுபோல் தஞ்சையிலும் விடங்கர்க்குப் பூசை நடந்தபிறகே பெருவுடையார்க்குப் பூசை நடைபெறுகிறது. தியாகராசப் பெருமான் சந்நிதி எதிரே **இராசராசசோழன் விக்கிரகம்** சிறப்புடன் உள்ளது. தபன மண்டபத்தின் வடபகுதியில் சந்திரசேகரர் முதலிய உற்சவ விக்கிரகங்கள் பல காட்சியளிக்கின்றன.

## 12. தட்சிணாமூர்த்தி சந்நிதி

பரந்தவெளிமுற்றத் திருச்சுற்றின் தென் பகுதியிலே கோயில் விமானத்தை அடுத்த தெற்குவாயிற்படியின் மேற்குப் பகுதியில் அடிவிமானத்தைச் சார்ந்த உயரமான இடத்தில் தட்சிணாமூர்த்தி சந்நிதி உள்ளது. இச்சந்நிதிக்கு இரண்டாம் சரபோஜி மன்னன் படிக்கட்டுகள் எடுப்பித்துச் சிறப்பித்தான் என்று ஒரு கல்வெட்டு கூறுகிறது.

## 13 பெரியநாயகி அம்மன் ஆலயம்

வடக்கு வெளிமுற்றத் திருச்சுற்றில் பெருவுடையார் ஆலயத்தின் முதல் மண்டப படிக்கட்டுகளுக்கும் பெரிய நந்திக்கும் இடையிலுள்ள பகுதியிலே அம்மன் ஆலயம் தனியே உள்ளது; பல மண்டபங்களை உடையது. இவ்வாலயம் தெற்கு நோக்கிய சந்நிதி ஆகும். அம்மையார் உருவிற் பெரியதாய் மிக வனப்போடு அருள் சுரக்கும் திருக்கோலத்துடன் விளங்குகின்றார். இக் கோயில் முன்னர் சிவகங்கைத் தோட்டத்தில் இருந்தது என்றும், அதனை ஒரு நாயக்க மன்னன் இடித்தான் என்றும், வேறொரு நாயக்க மன்னனால் இங்குக் கொண்டு

வந்து கட்டப்பெற்றது என்றும் கூறுவர். இவ்வாலயத்திற்கு நாயக்க மன்னர் காலத்திலும் இரண்டாம் சரபோஜி மன்னன் காலத்திலும் திருப்பணி செய்து குடமுழுக்கு நடைபெற்றது என்பர்

## 14. பரிவார ஆலயம்

தென்மேற்கே வெளிமுற்றத் திருச்சுற்றின் தொடக்கத்தில் பரிவார ஆலய விநாயகர் ஆலயம் உள்ளது. இவர் இப் பெரிய கோயில் கட்டுமுன் இருந்த முதல் மூர்த்தி ஆவர் தென்மேற்கிலிருந்து தொடர்ந்து வடகிழக்கு மூலைவரையிலுள்ள திருச்சுற்று மாளிகையில் சுமார் 252 சிவலிங்கங்களும் நவக்கிரக லிங்கங்களும் பிற மூர்த்திகளும் உள்ளனர். மேற்குத் திருச்சுற்று மாளிகைச் சுவரில் தொடங்கி மதுரை 64 திருவிளையாடல்களின் நிகழ்ச்சிகள் வர்ணத்தால் சித்தரித்துள்ளன. இவ்விலிங்கங்கள் மகராட்டிர மன்னர் காலத்துப் பிரதிட்டை செய்யப் பெற்றனவாம்.

## 15. சண்டேசுவரர் ஆலயம்

வெளிமுற்றத் திருச்சுற்றின் வடபாரிசத்தில் பெருவுடையார் ஆலயக் கோமுகத்தின் சற்றுக் கீழ்பால் உயர்ந்த பாகத்தில் சண்டேசுவரர் ஆலயம் உள்ளது. இஃது இராசராசனல் கட்டப் பெற்றது. இம்மூர்த்தியே சிவாலயச் சொத்துக்களை முதன்மையாகக் கண்காணிப்பவர். இதனல் இவர் **கோயிற்கண்காணியாளர்** எனப்படுவர்.

## 16. கருவூர்த்தேவர் ஆலயம்

வெளிமுற்றத் திருச்சுற்றின் மேற்கில் அதாவது பெருவுடையார் கோயிலுக்குப் பின் பக்கத்தில் ஒரு மேடைமீது கருவூர்த் தேவர் கோயில் அமைந்துள்ளது; இங்கு வியாழன் தோறும் சிறப்புப் பூசனையும் பிரார்த்தனைகளும் நடக்கின்றன! இவரே பெருவுடையார்க்கு அட்டபந்தன மருந்து சாத்திப்

பந்தனம் செய்து சிறப்பித்தவர் ஆவர். இங்குக் கருவூர்த் தேவர் உற்சவ விக்கிரகம் ஒன்று அழகுடன் உள்ளது.

## 17. இறைவன் - இறைவி திருநாமங்கள்

தஞ்சைப் பெரியகோயிலில் எழுந்தருளிய சிவலிங்கமூர்த்தி **பெருவுடையார்** எனவும், **தட்சிணமேருவிடங்கர்** எனவும், **இராசராசேச்சுவரமுடையார்** எனவும் பெயர் பெறுவர். தியாகராசப் பெருமான் **தஞ்சைவிடங்கர்** எனவும், நடராசப் பெருமான் **ஆடவல்லான்** எனவும் பெயர் பெறுவர். அம்மையார் **பெரியநாயகியம்மை** எனவும், **உமாபரமேசுவரி** எனவும், **உலகமுழுதுடையாள்** எனவும் பெயர் பெறுவர். வடமொழியில் சுவாமியை **பிரகதீசுவரர்** என்றும், அம்மையை **பிரகந்நாயகி** என்றும் கூறுவர்.

## 18. தலமரம் தீர்த்தம் முதலியன

தஞ்சைப் பெருவுடையார் ஆலயத்திற்குத் தலமரம் **வன்னி விருட்சம்** என்பர். தீர்த்தம் **சிவகங்கை**, **தேரைத்தீர்த்தம்** (இது தற்போது கிணறு) என்பர் சிவகங்கைத் தீர்த்தம் பெருவுடையார் ஆலயத்திற்கு வடபால் உள்ளது இஃது ஒரு புனித தீர்த்தம். ஒரு சமயம் கிருமியால் மொய்க்கப்பெற்ற கிருமிச் சோழன் ஒருவன் வேட்டையாடிக் களைத்து இச் சிவ கங்கையில் வந்து முகங்கழுவி நீர் உண்டான் உடனே அவனைப் பற்றிய கிருமிகள் நீங்கின என்பர் தேரைத் தீர்த்தம் நடராசப் பெருமான் திரு மண்டபத்தை அடுத்த மேற் பால் இருந்தது அஃது இப்போது மூடப்பெற்று ஒரு கிணறாக உள்ளது. பெரிய நந்தியினுள் இருந்த தேரையை எடுத்து இத் தீர்த்தத்தில் விட்டனராம். அதனால் அது தேரைத் தீர்த்தம் எனப்பட்டது என்பர்

இப்பெருவுடையார்க்கு நித்தியபூசை நைமித்திக பூசை, உற்சவங்கள் முதலியன மகுடாகமம் என்னும் சிவாகமப்படி நடைபெறுவனவாம் பெருவுடையார்க்கு நித்தியபூசை காலை,

உச்சி, மாலை என்னும் மூன்று காலத்திலும் நடைபெறு கின்றது இறைவர்க்குரிய திருமஞ்சன நீரில் சண்பகமொட்டு, ஏல அரிசி, இலாமிச்சவேர், பன்னீர் புஷ்பம இவற்றை ஊற வைத்துத் திருமஞ்சனம் ஆட்டுவது வழக்கம் என்பர்.

இறைவன் மூலத்தானத்தில் நாடோறும் நெய் விளக்கு கள் ஏற்றப்பட்டதாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. பழய புன்சை அரிசியால் சமைத்த சுத்த அமுது, கரியமுது, பருப் புமுது, நெய்யமுது, தயிர் அமுது முதலியன நாடோறும் மூன்று காலத்திலும் இறைவர்க்கு நைவேத்தியம் செய்விக்கப் பெற்றன என்பர்.

பெருவுடையார் திருமுன் நாடோறும் தேவாரத் திருப் பதிகங்கள் விண்ணப்பஞ் செய்ய இராசராச சோழனே தமிழிசையில் வல்ல 48 ஓதுவார்களையும் கெட்டி மத்தளம் உடுக்கை வாசிக்க இருவரையும் நியமித்தான். இவர்களே அன்றி, கனபாடி, ஆரியம் பாடுவாரும், தமிழிசை பாடுவாரும் இருந்தனர். கோயில் காரியங்களைப் பார்ப்பவர் பலர் இருந் தனர் என்றும், ஆலயப்பணி செய்ய பணிப் பெண்கள் பதியி லார் 400 பேர்கள் இருந்தனர் என்றும், பற்பல வாத்தியங்கள் வாசிப்போர் பலர் இருந்தனர் என்றும் கல் வெட்டுகள் கூறுகின்றன.

## 19. திருவிழாக்கள்

சோழமன்னர் காலத்தில் பெரிய கோயிலில் ஒவ்வொரு மாதமும் இராசராசசோழன் பிறந்த நாளாகிய சதயநாள் விழா வும் கார்த்திகை மாதக் கார்த்திகைத் தீப விழாவும் நடை பெற்றன. இவையே அன்றி ஒன்பது நாள் வைகாசிப் பெரு விழாவும் நடைபெற்றது. பின்னர் திருவாரூர்க்கோயிலில் நடைபெறுவதுபோல இந்த வைகாசிப்பெருவிழா 18-நாளாகச் சித்திரையில் இன்றுவரை நடைபெற்று வருகிறது. சித்தி ரைப் பெருவிழாவுக்குக் கொடியேற்றும் நாளையும், ஆட வல்லான் (நடராசப்பெருமான்) எழுந்தருளும் நாளையும் முன் னர் பறையடித்துத் தெரிவிப்பர்.

இராசராசன் பெருவுடையாராகிய சிவலிங்கப்பெருமானை, நருமதை நதி தீரத்திலிருந்து கொண்டு வரும்போது 64-வீட்டு வேளாண் செட்டிமார்களும் உடன் வந்து சிறப்பித்தார்கள் என்பர். அதற்கு அறிகுறியாகச் சித்திரைப் பெரிய விழாவில் அட்டகொடி அன்று, தஞ்சை மேலவீதி, 64 வீட்டு வேளாண் செட்டிமார்களைச் சண்டேசுவரர் மூலம் மேளவாத்தியச் சிறப்புடன் அழைப்பித்து கோயில் மரியாதைகள் செய்யும் பழக்கம் ஒன்று இன்றும் இருந்து வருகிறது.

இன்னும் வசந்த விழா, மார்கழித் திருவாதிரை விழா முதலிய விழாக்களும் சிறப்புடன் நடைபெறுகின்றன.

சோழ மன்னர் காலத்தில் வைகாசிப் பெருவிழாவில் **இராசராசேச்சுவர நாடகம்** ஒன்று நடைபெற்று வந்தது. பின்னர் இந்நாடகம் ஆடுவது வெகுகாலமாக நின்றுவிட்டது. தஞ்சையில பிற்காலத்தே அரசாண்ட சரபோஜி மன்னர் கால முதல், அம்மன்னர்மீது இயற்றிய '**சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம்**' ஒன்று சித்திரைப் பெருவிழா தோறும் ஒன்பதாம் நாள் அட்டக்கொடி விழா அன்று, ஆடவல்லான் சந்நிதி முன் உள்ள மேடைமீது குறவஞ்சி நாடகம் நடை பெற்று வருகிறது.

## 20. நிபந்தங்கள்

பெருவுடையார் பெரிய கோயிலுக்கு இராசராசசோழன் நித்திய நைமித்திய வழிபாட்டிற்கும் உற்சவாதிகளுக்கும் பிற வற்றிற்கும் ஏற்படுத்திய நிபந்தங்கள் பலவாம். பற்பல வகையான அணிகலங்கள், பூசாபாத்திரங்கள், விளை நிலங்கள் முதலியன இராசராசன் காலத்திலும் பிற அரசர் காலத்திலும் வழங்கப்பெற்றுள்ளன.

# 21 முதல் இராசராச சோழன்

*முன்னுரை*

சோழ மன்னர் என்பவர் தமிழகத்தின் கீழ்ப் பகுதியான சோழ நாட்டைத் தொன்றுதொட்டு ஆண்டு வந்த அரச மரபினர். "இவர்கள் படைப்புக்காலந் தொட்டு மேம்பட்டு வந்த பழைய குடியினர்; சூரிய குலத்தினர்; ஆத்திமாலை, புலிக்கொடி, புலி முத்திரை இவற்றை அடையாளமாகக் கொண்டவர்; இமயம் முதல் குமரிவரை ஆட்சி புரிந்தவர் சங்க காலச் சோழர்கள் உறையூர், காவிரிப்பூம்பட்டினம் இவ்விரண்டையும் தலைநகராகக்கொண்டனர் பிற்காலச் சோழர்கள் தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம், பழையாறைநகர் முதலியவற்றைத் தலைநகராகக் கொண்டு விளங்கினர். பிற்காலச் சோழர்களில் **விசயாலய சோழன்** (கி. பி 846 - 881) முதற் கொண்டு சோழப் பேரரசு ஓங்கலாயிற்று.

*இராசராசனின் பிறப்பு*

முதல் **இராசராசசோழன்** என்பவன் பிற்காலச் சோழர் குடியில் தோன்றித் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த விசயாலயனுக்குப் பின் வந்த - மிக ஆற்றல் வாய்ந்த அரசர்களில் முதன்மை பெற்ற பேரரசன் ஆவான். இவன் இரண்டாம் பராந்தகனுகிய **சுந்தர சோழன்** புதல்வன். இவனது தாய் பட்டத்தரசியாகிய **வானவன்மா தேவி** ஆவள். இராசராசன் ஒரு ஐப்பசித்திங்கள் சதய நாளிலே *நல்லோரையில் பிறந்தவன் இளமையிலேயே பேரரசனுதற்குரிய உத்தம இலக்கணங்கள் எல்லாம் பெற்று விளங்கியவன். இவனுக்குப் பெற்றோர்கள் இட்டு வழங்கிய பெயர் **அருண்மொழி வர்மன்** என்பதாம் இவனுக்கு ஆதித்த கரிகாலன் என்ற ஒரு தமயனும், குந்தவை பிராட்டி என்ற ஒரு தமக்கையும் இருந்தனர். ஆதித்த கரிகாலன் பெருவீரனுக விளங்கியவன். இவன் கி பி. 966-ல் இளவரசுப் பட்டம் பெற்றுத் தன் தந்தை

---

* இதனை, "சதய நாள் விழா உதியர் மண்டலந் தன்னில் வைத்தவன்" எனவரும் கலிங்கத்துப் பரணியால் அறியலாம்.

சுந்தரசோழனுடன் அரசாங்க அலுவலில் இருக்கும்போது சோழ நாட்டில் சில வஞ்சகர்களால் கி. பி. 969-ல் கொல்லப் பட்டான் காரணம் விளங்கவில்லை. குந்தவை பிராட்டியை வல்லவரையன் வந்தியதேவன் மணந்துகொண்டான்.

### தன்மை

அருண்மொழிவர்மனாகிய இராசராசனை இளமையில் போற்றி வளர்த்தவர்கள் இவன் பாட்டியான முதல் கண்டராதித்தசோழன் மனைவி **செம்பியன்மாதேவியும்**, இவன் தமக்கை **குந்தவை**யும் ஆவர். இவர்கள் சைவப் பற்று, சிவ பக்தி முதலான சிறந்த குணங்களை உடையவர்கள். அதனால் இவன் தன் ஆட்சியில் வீரம், கொடை, கலைவளர்ச்சி முதலிய வற்றில் சிறந்து நின்று சமயப்பற்று உடையவனாக வாழ்ந்து வந்தான்; சோழ நாட்டைச் சிவனுறையும் நாடாக ஆக்கினான்; சிறந்த ஆற்றலும் வீரமும் நுண்ணறிவும், கடவுள் பக்தியும், தோற்றப் பொலிவும் பெற்று விளங்கினான். இவன், தன் தந்தைக்குப் பின்னர் முடி சூடிச் சோழ நாட்டை ஆள வேண்டியவன். சோழ நாட்டு மக்களும் இவனே அரசனாக வரப் பெரிதும் விரும்பினர். ஆனால், இவன் தன் பெரிய பாட்டன் புதல்வனும் தன் சிறிய தந்தையுமாகிய **உத்தம சோழனுக்கு** அரச உரிமையை கி. பி. 970-ல் அளித்துத் தான் இளவரசு பட்டம் பெற்றுச் சோழ ஆட்சியில் ஈடுபட்டான். இதனால் இவனது விரிந்த மனப்பான்மை, அறநெறி பிழையாமை முதலான நற்குணங்களை உணரலாம். இவன் தனது ஆட்சியில் பிற மதங்களைச் சிறிதும் வெறுத்தவன் அல்லன்.

### ஆட்சி

அருண்மொழிவர்மனாகிய முதல் இராசராசசோழன், உத்தம சோழன் இறந்த பின்னர் கி. பி. 985-ல் முடி சூட்டப் பெற்று அரியணை ஏறினான். **இராசகேசரி** என்ற பட்டம் பூண்டான். சில ஆண்டு சோழ நாட்டின் நலனைக் கவனித்து வந்தான்; படைப் பலத்தைப் பெருக்கினான்; தக்கவர்களை நியமித்து

அரச காரியங்களைச் செவ்வனே நடத்தினான்; தனது சோழ இராச்சியம் முழுவதையும் அளந்து ஒவ்வொரு மண்டலத்தையும் பல வள நாடாகப் பிரித்து அமைத்தான்; நாட்டில் ஓவியம், சிற்பம், நாடகம், நடனம், இசை, இலக்கியம் முதலியவற்றை வளர்த்தான். 29-ஆண்டுகள் பெரும் புகழுடனும் செல்வச் சிறப்புடனும் ஆட்சிபுரியலானான்.

**மனைவிமார்கள்.**

முதல் இராசராச சோழனுக்குப் பல மனைவியர் இருந்தனர். அவர்களுள் பட்டத்தரசியாகத் திகழ்ந்தவள் **உலோக மாதேவி** ஆவள். இவளுக்கு தந்தி சக்திவிடங்கி என்ற வேறொரு பெயரும் உண்டு. இவளே இவன் வாழ்நாள் முழுவதும் பட்டத்தரசியாக விளங்கியவள். இவனது மற்றைய மனைவியர்களில் **வானவன் மாதேவி** என்பவள் ஒருத்தி அவள் பெருவீரனாகிய **முதல் இராசேந்திரனை** (கங்கைகொண்ட சோழனை)ப் பெற்றவள். இராசேந்திரன் ஒரு மார்கழித் திருவாதிரையில் பிறந்தவன். இராசராசனுக்கு இராசேந்திரனைத் தவிர வேறு புதல்வர் இல்லை. ஆனால் இரு பெண்மக்கள் இருந்தனர். மூத்தவள் மாதேவடிகள். இவளுக்குச் சந்திரமல்லி என்ற வேறொரு பெயரும் உண்டு. இளையவள் இரண்டாம் குந்தவை ஆவள்.

**வெற்றிச்சிறப்பு**

முதல் இராசராசசோழன், தனது ஆட்சி 3-ஆம் ஆண்டிலே (கி பி. 988) சேரநாட்டு வெற்றி காரணமாக, **இராசராசன்** (அரசர்களுக்கு அரசன்) என்ற பட்டம் பெற்று விளங்கினான். பின்னர் இப்பெயர் இவனுக்கு என்றும் நின்று நிலவியது; அருண்மொழிவர்மன் என்ற இயற்பெயர் வழக்கற்றுப் போயிற்று. இவன் **பாண்டிய குலாசனி** (குல + அசனி = குலாசனி பாண்டிய குலத்திற்கு இடிபோன்றவன்) என்ற ஒரு சிறப்புப் பெயரும் பெற்றுத் திகழ்ந்தான். தன் ஆட்சியில் பிற நாடுகளையும் தீவுகளையும் கைக்கொண்டு **மும்முடிச்சோழன்** என்ற சிறப்புப் பெயருடன் அரசுபுரிந்தான் இவன் பெற்ற

வெற்றிகளும் சிறப்புப் பெயர்களும் அளவிறந்தனவாம். இவன் ஆட்சியில்தான் சோழ மண்டலம் உயர்நிலை அடைந்தது.

இராசராசசோழன் முன்பு தன் மகனாகிய இராசேந்திரனைத் தலைமைச் சேனாதிபதியாக நியமித்தான், பின்பு அவனுக்கு கி. பி. 1012 ல் இளவரசு பட்டம் கட்டி அரசாங்க அலுவல்களில் பயிற்சிபெறச் செய்தான். அப்போது அவனுக்கு 30 வயதிற்குக் குறையாது என்பர். இராசராசனுக்குப் பிற சேனாதிபதிகளும் இருந்து வந்தனர். இவர்கள் கப்பற்படையிலும் நல்ல தேர்ச்சி பெற்றவர்கள்; பல வெற்றிகளை தன் அரசனுக்குத் தந்து பெரும் புகழ் கொண்டவர்கள்.

### கோயிற்பணி

இராசராச சோழன் திருவாரூர்த் தியாகராசப் பெருமானிடத்தும், தில்லை நடராசப் பெருமானிடத்தும் பெரும் பக்தி பூண்டவன். இவனது சிவபக்தியினைக் கண்ட தில்லைவாழந்தணர்கள் இவனது ஆட்சி 19-ஆம் ஆண்டில் இவனுக்குச் **சிவபாதசேகரன்** என்ற ஒரு சிறப்புப் பெயரை அளித்தனர். அதன் பின்னர், இராசராசன் தனது பாண்டிய குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சை நகரில் ஒரு பெரிய மேடான இடத்தில் பெருங்கோயில் (சிவாலயம்) ஒன்று எடுப்பித்தான். அது முழுதும் கற்றளி ஆகும். அப்பர் சுவாமிகள் திருவீழிமிழலைத் திருத்தாண்டகத்தில் "**தஞ்சைத் தளிக்குளத்தார்**" என்ற ஒரு சிவத்தலத்தைக் குறிப்பிடுகிறார். அது தஞ்சாவூரில் பழமையாக இருந்த தேவாரப்பதிகம் இல்லாத வைப்புத் தலமான ஒரு சிவாலயம். அதனையே இராசராசன் பெருங்கோயிலாக எடுப்பித்தான் என்பர்.

இப்பெருங்கோயில் இராசராசன் கட்டியதால் **இராசராசேச்சரம்** எனப் பெயர் பெற்றது. இக்கோயில் 793-அடி நீளமும் 397 அடி அகலமும் நடுவிலுள்ள விமானம் 216 அடி உயரம் உடையது; அது **தட்சிணமேரு** என்றபெயர் பெறுவது இராசராசன் இக் கோயில் திருப்பணியைத் தனது

ஆட்சி 19-ஆம் ஆண்டில் தொடங்கி 23-ஆம் ஆண்டில் பெரும்பாலும் செய்து முடித்தான் என்றும், 25-ஆம் ஆண்டில் குடமுழுக்குச் செய்தான் என்றும் கூறுவர். இராசராசேச்சரம் என்ற பெரிய கோயிலில் எழுந்தருளிய பெருவுடையார் - சிவலிங்கப் பெருமான் பெருவடிவு கொண்ட மூர்த்தி ஆவர். அவர்க்கு அட்டபந்தன மருந்து சாத்தும்போது மூர்த்தி வடிவு மிகப் பெரியதாக இருந்ததால் மருந்து இளகியே நின்றது; ஒரு சிறிதும் இறுகவில்லை அரசன் மனங்கவன்றான்; பின்னர் கருவூர்த் தேவரைக் கொண்டு மருந்து சாத்த மருந்து மிக இறுகிக் கெட்டிப் பட்டு மூர்த்தி செவ்விய நிலையில் நின்றது அது கண்ட அரசன் பெருவுடையார்க்கு **இராசராசேச்சுரம் உடையார்** எனவும் **தட்சிணமேருவிடங்கர்** எனவும் **தஞ்சைவிடங்கர்** எனவும் திருப் பெயர் இட்டு வழிபட்டான்.

இக்கோயிலுள் பெருவுடையார் சந்நிதி முன் உள்ள பெரிய நந்தியையும் திருச்சுற்றில் சண்டேசுவரரையும் அரசன் அமைத்ததாகும். அன்றியும் அரசன் இங்கு திருவாரூர்த் தியாகராசரை (சோமாஸ்கந்த மூர்த்தியை)ப் போல் ஒரு மூர்த்தியையும் தில்லை நடராசப் பெருமானைப்போல் ஒரு மூர்த்தியையும் அமைத்து வைத்தான்; தியாகராசப் பெருமானுக்கு **விடங்கர்** என்றும் நடராசப் பெருமானுக்கு **ஆடவல்லான்** என்றும் திருநாமம் சூட்டி வழிபட்டான். இராசராசன் பெருவுடையாரிடம் கொண்ட பேரன்பு அளவுகடந்ததாகும். அதற்கு அறிகுறியாகத் தனது பண்டாரத்தை (பொக்கிஷத்தை)த் **தஞ்சை விடங்கன** என்றும், கோயில் மரக்காலை **ஆடவல்லான்** என்றும், நிறை கல்லை **தட்சிணமேரு விடங்கன்** என்றும் வழங்கியுள்ளான்.

**அறச்செயல்**

இப் பெரிய கோயிலுக்கு இராசராசன் பல நிவந்தங்களை அமைத்து மூன்று கால பூசனை, விழா முதலியவற்றைச் சிறப்பாகச் செய்வித்தான்; ஓதுவார்களை நியமித்துத் திருமுறைகளை ஓதும்படி செய்தான். இதனால் இராசராசன்

சைவ உலகில் அழியாப் புகழைப் பெற்று விளங்கினன். பின்னர் இராசராசன் தனது ஆட்சி 29-ஆம் ஆண்டில் (கி பி, 1014 ல்) கும்பகோணத்தை அடுத்த திருவியலூர்க் கோயிலில் **துலாபாரதானம்** புகுந்தான். இதுவே இவனது இறுதி அறம் என்பர்.

இராசராசன் காலத்தில் **இராசராசேச்சுர நாடகம்** என்ற நாடக நூல் ஒன்று இருந்ததாகப் பெரிய கோயில் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. அந்நூல் முதல் இராசராச சோழன் வெற்றி வரலாறு. இராசராசேச்சுரம என்னும் கோயில் எடுப்பித்த வரலாறு முதலானவற்றைத் தன்பாற் கொண்டதாகும் என்பர்.

## 22. கருவூர்த்தேவர்

### கருவூர்த் தேவர் இயல்பு

கருவூர்த் தேவர் என்பவர் கீழக் கொங்கு நாட்டிலுள்ள கருவூரில் பிறந்தவர். அதனால் அவர் **கருவூர்த் தேவர்** எனப் பெயர் பெற்றார். (தேவர் - உயர்ந்தோர்.) இவரது இயற் பெயரும் பெற்றோர்கள் பெயரும் விளங்கவில்லை. இவர் அந்தணர் குலத்தவர். சிலர் இவரை வேளாளர் குலத்தவர் என்றும், பொற்கொல்லர் குலத்தவர் என்றும் கூறுவர். இவர் வேத சிவாகமங்களைப் பயின்றவர்; இனிய தமிழைக் கற்றவர்; கவி பாடுவதில் வல்லவர்; சைவ சமயத்தில் நின்றவர்; போக-நாதர் என்னும் சித்தரிடம் ஞானேபதேசம் பெற்றுச் சிவயோ கத்தில் திளைத்தவர்; தம் உடல் நன்னிலைபெறக் காய கற்பம் உண்டவர் சித்தர்கள் பலருடன் இருந்து பல சித்திகள் பெற்றவர். ஒருசமயம் தம்மூரிலுள்ள மக்களுக்குக் காலமல்லாத காலத்தில் மழை பெய்யவும், ஆற்றில் வெள்ளம் பெருகிவர வும், பூதங்கள் தமக்குக் குடை பிடிக்கவும் இவை போன்ற பல அற்புதங்களைக் காட்டி மகிழவைத்தவர். பித்தர் போல் திரிந் தவர்; துறவுநிலைபூண்டு பிட்சை ஏற்று உண்டவர்; உலகப் பற்றுச் சிறிதும் இல்லாதவர்; மலைகளிலும் காடுகளிலும்

பற்பல நகரங்களிலும் திரிந்தவர்; சிவத் தலங்களைத் தரிசித்து வழிபடுவதில் பெருவிருப்புக் கொண்டவர்.

### தென்னாட்டு யாத்திரை

இவர், ஒருசமயம் தென்பாண்டி நாட்டிலுள்ள திருப்புடை மருதூர் (கடைமருது) சென்று அங்குத் திருக்கோயில் கொண்டு எழுந்தருளிய சிவபெருமானிடம் திருவடி தீட்சை பெற்றார்; ஸ்ரீ வைகுண்டத்தை அடுத்த காந்தீசுவரம் என்ற சிவத் தலத்தில் இறைவனின் பேரொளியைக்கண்டு தரிசித்து மகிழ்ந்தார். பின்பு இவர் நெல்லைப் பதியை (திருநெல்வேலியை) அடைந்து திருக்கோயில் திருவாயிலின் முன்நின்று, "நெல்லையப்பா" என்று அன்புடன் கூவி அழைக்க, அப்பொழுது நெல்லையப்பர் இவரது பெருமையைப் பலரும் அறியும் பொருட்டுச் சிறிது காலம் தாழ்க்க, "இங்குக் கடவுள் இல்லை போலும்" என்று பெருஞ்சினத்துடன் "ஈசன் அங்கு; எருக்கு இங்கு' என்று கூறிக் கொண்டு செல்ல, சிவாலயம் பாழாகியது. அதனை அறிந்த ஊரார் நெல்லையப்பரை வேண்டி வருந்த, நெல்லையப்பர் கருவூர்த் தேவரை மானூர் என்ற இடத்தில் சந்தித்து அருள்பாலித்து நெல்லைப் பதிக்கு அழைத்து வந்து காட்சி கொடுத்தருளினார். அப்போது கருவூர்த் தேவர் மன மகிழ்ந்து, "செந்நெல் இங்கு; எருக்கு அங்கு" என்று கூற, நெல்லையப்பர் ஆலயம் செழித் தோங்கியது என்பர்.

### பொதியமலை வாசம்

பிறகு, கருவூர்த்தேவர் நெல்லைப்பதியை விடுத்துத் திருக் குற்றாலம், பாபநாசம் முதலிய தலங்களைத் தரிசித்துக் கொண்டு பொதியமலையை அடைந்தார்; அங்கு அகத்தியர் அருள்பெற்றுப் பலகாலம் இருந்தார்.

### தஞ்சை மாநகர்க்கு வருதல்

கருவூர்த் தேவர் பொதிய மலையில் இருக்குங்கால் தஞ்சாவூரில் முதல் இராசராச சோழன் (கி. பி. 938 — 1014) தனது ஆட்சியில் தஞ்சைப் பெருவுடையார்க்குப் பெருங்கோவில்

எடுப்பித்து அவர்க்கு அட்டபந்தன மருந்தைப் பலமுறை சாத்தியும் அது இறுகி நிற்காமல் இளகி நின்றது. அது கண்ட அரசன் வருந்தி, "என் செய்வது?" என மனக்கவலை கொண்டான். அப்போது, "கருவூர்த் தேவர் இங்குவரின் நீ எண்ணிய கருமம் கை கூடும்." என்று விண்ணிடை ஓர் அசரீரி எழுந்தது. அதனைக்கேட்ட அரசன் மகிழ்ந்து, "அப் பெரியார் இங்கு வருவது எப்படி?" என்று அங்கிருந்தாரை வினவியபோது, மாற்றுருவம் தாங்கி அங்கு நின்ற போக-நாதர் என்னும் சிவயோகியார், "அரசே! வருந்தற்க; கருவூர்த் தேவரை இங்கு யாம் வரவழைக்கின்றோம்" என்று கூறித் தம் தவ வலிமையால் பொதியமலையில் இருந்த கரு-வூர்த் தேவரை தஞ்சைக்கு வருமாறு அழைப்பித்தார். கருவூர்த் தேவரும் விரைந்து தஞ்சைப் பதியை அடைந்து தம் குருவையும், அரசனையும் கண்டு செய்தியை அறிந்தார். பின்பு, பெரிய கோயிலுட் சென்று பெருவுடையாரை (சிவலிங் கத்தை) வணங்கித் தம் தவ வலிமையால் அட்டபந்தன மருந்தைப் பொன்னை உருக்கி வார்த்ததுபோல இறுகச்செய்து பெருவுடையாரைச் செவ்வனே நிலைநிறுத்தினர். அப்போது பெருவுடையார் **இராசராசேச்சுரம் உடையார்** என்ற திரு நாமம் பெறலானார் பின்னர் கருவூர்த் தேவர் பெருவுடையார் மீது **திருவிசைப்பா திருப்பதிகம்** ஒன்று பாடித் துதித்து வணங்கினர். அன்றியும் இவர் பல சிவத் தலங்களுக்கும் திருவிசைப்பா பாடியுள்ளார்.

### கருவூர் அடைதல்

அதன் பின்னர் கருவூர்த் தேவர் தஞ்சையினின்றும் புறப்பட்டு ஸ்ரீரங்கத்தைத் தரிசித்துக்கொண்டு கருவூரை அடைந்தார். கருவூரிலுள்ள சில வைதிகப் பிராமணர்கள் கருவூர்த்தேவரது தன்மையை அறியாது அவ்வூர் அரசன்பால் சென்று கருவூர்த்தேவர். வைதிக ஒழுக்கத்தை விட்டவர் என்றும், வாம பூசை செய்பவர் என்றும் இவை போன்ற பல பழிச் சொற்களைக் கூறி ஊரை விட்டு அகற்ற முயன்றனர். அரசன் கருவூர்த் தேவரின் தூய்மை நிலையினை ஆராய்ந்து

அறிந்து மகிழ்ந்து பழிச் சொற் கூறும் அந்தணர்களைச் சினந்து கண்டித்தான். பிறகு அவ்வந்தணர்கள் அழுக்காற்றினால் மறைமுகமாகக் கருவூர்த்தேவர்க்குப் பல துன்பங்களை இழைத்துவந்தனர்.

### கருவூர்த் தேவர் வீடுபெறுதல்

ஒரு நாள் கருவூர்த் தேவர் அவ்வைதிகப் பிராமணர்களுக்குப் பயந்தவர் போல நடித்து ஓடிக் கருவூர்த் திரு ஆனிலை ஆலயத்துள் புகுந்து பசுபதீசுவரரைத் தழுவிக் கொண்டு இரண்டறக் கலந்தருளினார் என்பர். இவரது காலம் சுமார் 930 ஆண்டுகளுக்கு முன்னர் ஆகும்.

உ

சிவ சிவ

கருவூர்த் தேவர் அருளிய

# தஞ்சை இராசராசேச்சுரம்

# திருவிசைப்பா

பண் - பஞ்சமம் (9-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

உலகெலாம் தொழவந்(து) எழுகதிர்ப் பருதி
ஒன்றுநூ றாயிர கோடி
அலகெலாம் பொதிந்த திருவுடம்(பு) அச்சோ!
அங்ஙனே அழகிதோ; அரணம்
பலகுலாம் படைசெய் நெடுநிலை மாடம்
பருவரை ஞாங்கர்வெண் டிங்கள்
இலைகுலாம் பதணத்(து) இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத்(து) இவர்க்கே. 1

நெற்றியிற் கண்என் கண்ணின்நின் றகலா;
நெஞ்சினில் அஞ்சிலம்(பு) அலைக்கும்
பொற்றிரு வடிஎன் குடிமுழு தாளப்
புகுந்தன; போந்தன இல்லை;
மற்றெனக்(கு) உற(வு) என்? மறிதிரை வடவாற்
றிடுபுனல் மதகில்வாழ் முதலை
எற்றுநீர்க் கிடங்கில் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 2

சடைகெழு மகுடம் தண்ணிலா விரிய
வெண்ணிலா விரிதரு தரளக்
குடைநிழல் விடைமேற் கொண்டுலாப் போதும்
குறிப்பெனோ? கோங்கிணர் அனைய
குடைகெழு நிருபர் முடியொடு முடிதேய்ந்(து)
உக்கசெஞ் சுடர்ப்படு குவையோங்(கு)
இடைகெழு மாடத்(து) இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே 3

வாழியம் போதத்(து) அருகுபாய் விடையம்
வரிசையின் விளக்கலின் அடுத்த
சூழலம் பளிங்கின் பாசலர் ஆதிச்
சுடர்விடு மண்டலம் பொலியக்
காழகில் கமழும் மாளிகை மகளிர்
கங்குல்வாய் அங்கலி கெழும
யாழொலி சிலம்பும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 4

எவரும்மா மறைகள் எவையும் வானவர்கள்
ஈட்டமும் தாட்டிருக் கமலத்
தவரும்மா லவனும் அறிவரும் பெருமை
அடலழல் உமிழ்தழற் பிழம்பர்
உவரிமா கடலின் ஒலிசெய்மா மறுகில்
உறுகளிற்(று) அரசின(து) ஈட்டம்
இவருமால் வரைசெய் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 5

அருளுமா றருளி ஆளுமா ருள
அடிகள்தம் அழகிய விழியும்
குருளும்வார் காதும் காட்டியான் பெற்ற
குயிலினை மயல் செய்வ(து) அழகோ?
தரளவான் குன்றில் தண்ணிலா ஒளியும்
தருகுவால் பெருகுவான் தெருவில்
இருளெலாங் கிழியும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 6

தனிப்பெருந் தாமே முழுதுறப் பிறப்பின்
தளிர்இறப்(பு) இலை உதிர்(வு) என்றால்
நினைப்பருந் தம்பாற் சேறலின் றேனும்
நெஞ்சிடிந் துருகுவ(து) என்னோ?
சுனைப்பெருங் கலங்கற் பொய்கையங் கழுநீர்ச்
சூழல்மா ளிகைசுடர் வீசும்
எனைப்பெரு மணஞ்செய் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 7

பன்னெடுங் காலம் பணிசெய்து பழையோர்
தாம்பலர் ஏம்பலித் திருக்க
என்னெடுங் கோயில் நெஞ்சு வீற் றிருந்த
எளிமையை என்றும்நான் மறக்கேன்;
மின்னெடும் புருவத்(து) இளமையில் அனையார்
விலங்கல்செய் நாடக சாலை
இன்னடம் பயிலும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே 8

மங்குல் சூழ்போதின் ஒழிவற நிறைந்து
வஞ்சகர் செஞ்சகத்(து) ஒளிப்பார்;
அங்கழல் சுடராம் அவர்க்கிள வேனல்
அலர்கதிர் அனையவா ழியரோ!
பொங்கெழில் திருநீ(று) அழிபொசி வனப்பில்
புனல்துளும்(பு) அவிர்சடை மொழுப்பர்;
எங்களுக்(கு) இனியர்; இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 9

தனியர்எத் தனையொ ராயிர வருமாம்
தன்மையர் என்வயத் தினராம்
கனியரத் தருதீங் கரும்பர்வெண் புரிநூற்
கட்டியர் அட்டஆர் அமிர்தர்
புனிதர்பொற் கழலர் புரிசடா மகுடர்
புண்ணியர் பொய்யிலா மெய்யர்க்(கு)
இனியர்எத் தனையும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 10

சரளமந் தார சண்பக வகுள
சந்தன நந்தன வனத்தின்
இருள்விரி மொழுப்பின் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவரை
அருமருந் (து) அருந்தி அல்லல்தீர் கருவூர்
அறைந்த சொல் மாலையா ரைந்தின்
பொருள்மருந்(து) உடையோர் சிவபதம் என்னும்
பொன்னெடுங் குன்றுடை யோரே. 11

அருணகிரிநாதர் பாடிய

# திருப்புகழ்

அஞ்சன வேல்விழி மடமாதர்
அங்கவர் மாயையில் அலைவேனோ
விஞ்சுறு மாவுன தடிசேர
விம்பம தாயருள் அருளாயோ?
தஞ்சமு தாவுணும் அரனூர்தம்
நன்கும ராவுமை அருள்பாலா!
தஞ்செண வாமடி யவர் வாழத்
தஞ்சையில் மேவிய பெருமாளே! 1

## இராசராசசோழன் துதி

விண்ணிறைந்த விமானத்தில் விளங்கிநிற்கும்
கலையழகு விளம்பற் கொண்ணு
கண்ணிறைந்த பணியாற்றிக் கருவூரார்
துணைபூண்ட கவிஞர் செல்வ!
எண்ணரிய அருமறையும் எழுதரிய
திருமுறையும் இயம்பக் கேட்ட
நண்ணரிய தவமுடையாய்! நலமாரும்
ராசராச நம்பி! போற்றி. 1

உலகுபுரந் தூட்டிவரும் உயர்பொன்னி
யாறொழுகி உயிர்க ளோம்பும்
பலவளனும் நிறைந்தோங்கும் பண்பாரும்
சோணாட்டின் பகரும் ஆட்சி
நலந்திகழக் கோலோச்சி நங்கள்பிரான்
எழுந்தருள நல்லோர் போற்றும்
தலமுயரும் தஞ்சைதட் சிணமேரு
ஆலயத்தைச் சமைத்தோய் வாழி!

— உறையூர் மு. ஆ. அருணாசல முதலியார்

# வேண்டுகோள்

**மெய்யன்பர்களே !**

தஞ்சைப் பெருவுடையார்க்கு முதல் இராசராச சோழன் பிறந்த ஐப்பசித் திங்கள் சதய நன்னாள் நினைவாக (31-10-68) ல் நடைபெறும் மாபெரும் அபிஷேகம்போல், நிகழும் கீலக ஆண்டு மார்கழித் திங்கள் திருவாதிரை நன்னாளில் (3—1—69)ல் கங்கைகொண்ட சோளேச்சரத்தில் எழுந்தருளிய பெருவுடையார்க்கு **மாபெரும் அபிஷேகம்** நடை பெற இருக்கிறது. இக் கோயிலைக் கட்டுவித்தவன் முதல் இராசராசசோழன் மகன் **முதல் இராசேந்திர சோழன்** (கி. பி. 1012-1044) ஆவன். இவன் திரு **மார்கழித்திங்கள் திருவாதிரை** நாளில் பிறந்தவன். இவன் கங்கைவரை சென்று பெரு வெற்றிபெற்று வந்த நினைவாக இக் கங்கை கொண்ட சோளேச்சரத்தை உண்டாக்கினான். எம் பெருமானுக்குக் கங்கை நீராட்டிச் சிறப்பித்தான். அதனால் அவன் **கங்கைகொண்ட சோழன்** எனப் பெயர்பெற்றான்.

அன்பர்கள் யாவரும் நடைபெற இருக்கும் கங்கைகொண்ட சோளேச்சரத்தான் மாபெரும் அபிஷேக விழாவில் பெரும்பங்குகொண்டு பெருவுடையார் திருவருளைப் பெற வேண்டுகின்றோம்.

மலைக்கோட்டை
திருச்சி-2
31—10—68

இங்ஙனம்,
**மௌனகுருவழிபாட்டுக் கழகத்தார்**